# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (23.09.2015 முதல் 27.09.2015)

**அறிக்கை எண் 74/2015** **தேதி: 22.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 40°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (23.09.2015 முதல் 27.09.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72-76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 58-62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23.09.15 | 2 | 33 | 24 | 5 | 72 | 58 | 16 | தென்மேற்கு |
| 24.09.15 | 4 | 33 | 24 | 5 | 73 | 59 | 16 | தென்மேற்கு |
| 25.09.15 | 4 | 32 | 23 | 5 | 74 | 60 | 16 | தென்மேற்கு |
| 26.09.15 | 6 | 32 | 23 | 5 | 75 | 61 | 16 | தென்மேற்கு |
| 27.09.15 | 4 | 32 | 23 | 5 | 76 | 62 | 16 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

வரும் ஐந்து நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால்

**திராட்சை**

- ✓ தற்போது நிலவும் காற்றின் ஈரப்பதம் மற்றும் மிதமான வெப்பநிலையால் ஆந்திரக்கனோஸ் நோய் தாக்குதல் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவை அல்லது 0.25 சதவீதம் காப்பர் பூஞ்சாணக்கொல்லியை தெளிக்கவும்.

**நெல்**

- ✓ போதிய வடிகால் வசதி ஏற்படுத்தி சம்பா நெல் நடவினை தொடர்ந்து மேற்கொள்ளவும்.

**பருத்தி**

- ✓ இறவை கம்போடியா பருத்திக்கு முதல் மேலுரமாக 20 கிலோ யூரியா, 6 கிலோ பொட்டாஷ் மற்றும் 25 கிலோ வேப்பம்புண்ணாக்கினை போடவும். தண்டுத் துளைப்பானை கட்டுப்படுத்த செடிகளுக்கு மண் அணைக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ இறவை கம்போடியா பருத்திக்கு முதல் மேலுரமாக 20 கிலோ யூரியா, 6 கிலோ பொட்டாஷ் மற்றும் 25 கிலோ வேப்பம்புண்ணாக்கினை போடவும். தண்டுத் துளைப்பானை கட்டுப்படுத்த செடிகளுக்கு மண் அணைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.